# திருச்செல்வர் காவியமும் கிறிஸ்தவப் பண்பாடும்

- கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்ரமணியம்
*(முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

தமிழிலக்கிய பாரம்பரியத்தில் காவியங்களுக்கும் புராணங்களுக்கும் சிறப்பான இடமுண்டு. குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய முக்கியத்துவம் மிக்க இலக்கிய வடிவங்களாக இவை அமைகின்றன. தமிழ் நாட்டிலெழுந்த காவியங்கள், புராணங்கள் காட்டி நிற்கும் பண்பாட்டு மரபு போல ஈழத்திற்கென்றும் தனித்துவமான காவியமரபு, பண்பாட்டு மரபு ஒன்று உண்டு. அந்தவகையில் ஈழத்தில் முதன்முதலில் எழுந்த தமிழ்க் கிறிஸ்தவக் காப்பியமாக திருச்செல்வர் காவியம் விளங்குகின்றது. இத்தகைய சிறப்புக்களையுடைய பூலோகசிங்க முதலியார் படைத்த திருச்செல்வர் காப்பியம் சிந்தனைக்கினிய கருத்தோவியங்களால் கவின்மிகு கற்பனை வளத்தால் உள்ளத்தைக் கவரும் உயிரத்துடிப்பு மிக்க சொற்சித்திரங்களால் அழகு பெற்றுள்ளது. ஆசிரியரின் படைப்பாற்றல் பலவகையான இலக்கியத்திறன்காளல், உத்திகளால், உரமும், ஊட்டமும் பெற்றுள்ளன. பூலோக சிங்கமுதலியாருடைய கலையுணர்வும் உணர்ச்சிப் பெருக்கும் கிறிஸ்தவப் பண்பாட்டை நிலைநிறுத்தியுள்ளது. மேலும் இன்றும் வாழும் இலக்கியமாகப் புகழ்பெறச் செய்துள்ளது என்பதே ஆய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். அத்தோடு இக்காவியம் தோற்றம் பெறுவதற்கு காரணமாய் அமைந்த சமூகக் காரணிகள் குறித்தும் அதன் தோற்றப் பின்னணிகள் குறித்தும் தெளிவான அறிமுகத்தை வழங்குவதும் இவ் ஆய்வின் துணை நோக்கங்களாகக் கொள்ளப்பட்டன.

**திறவுச் சொற்கள்: காவியம் - கிறஸ்தவப் பண்பாடு - சமூகக் காரணிகள்**

◆◆◆